**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு திட்டம் 2011–2012 – மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு – திருநெல்வேலி மாவட்டம் – ஆய்க்குடி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில் பகுதியில் தங்கும் விடுதி கட்டுதல் – நிர்வாக மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு3)த் துறை**

அரசாணை(நிலை) எண்.221 நாள்:26.11.2011

(திருவள்ளுவர் ஆண்டு 2042, கார்த்திகை–10)

**படிக்கப்பட்டது:-**

சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்களின் கடித எண்.6600/திமவ2 /2011, நாள்:30.09.2011.

-----

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், சுற்றுலாத்துறை மானியக் கோரிக்கை (2011–2012) விவாதத்தின்போது, 30.8.2011 அன்று மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

***"மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, பிரசித்தி மிக்க ஆன்மீகத் தலங்களான திருக்கடையூர், திருக்கோஷ்டியூர், இராமேஸ்வரம், பழனி, ஸ்ரீவாஞ்சியம், ஆய்க்குடி மற்றும் நவக்கிரக ஆலயங்கள் உள்ள தலங்களுக்கு வரும் பக்தர்களின் வசதிக்காக தங்கும் விடுதி, பொருட்கள் வைப்பறை, கழிப்பறை போன்ற வசதிகள் மேற்கொள்ளப்படும்".***

2. மேலே படிக்கப்பட்டுள்ள சுற்றுலா இயக்குநரின் கடிதத்தில், மேற்கண்ட அறிவிப்பின்படி, திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடி தொடர்பான கருத்துருவை சுற்றுலா இயக்குநர் அனுப்பியுள்ளார். சுற்றுலா இயக்குநர் தனது கருத்துருவில், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரால் திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடியில் உள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் பகுதியில் தங்கும் விடுதி (Dormitory Block) ரூ.25.00 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு வழங்கிடக் கோரப்பட்டுள்ளது என்றும், 2011–2012–ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத்துறை அறிவிப்புகளில் ஆய்க்குடியில் சுற்றுலா வசதிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடியில் உள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் பகுதியில் தங்கும் விடுதி (Dormitory Block) ஒன்றை ரூ.25.00 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கான கருத்துருவிற்கு பரிந்துரை அளிக்கப்படுகிறது என்றும், இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல், நிதி ஒப்பளிப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், ஒப்பளிக்கப்பட்ட தொகையை, சுற்றுலா இயக்குநர், சென்னை அவர்கள் பெற்று, பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி அவர்களிடம் வழங்க அனுமதி அளிக்குமாறும் சுற்றுலா இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கவனமான பரிசீலனைக்குப் பின்னர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா இயக்குநரின் கருத்துருவினை ஏற்று பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:

(அ) திருநெல்வேலி மாவட்டம் ஆய்க்குடியில் உள்ள அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் பகுதியில் ரூ 25.00 இலட்சம் (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) மதிப்பீட்டில் தங்கும் விடுதி கட்டுவதற்கு நிருவாக மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது.

(ஆ) பணிகளை மேற்கொள்ள ஏதுவாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவரிடம், வழங்கிட சுற்றுலாத்துறை இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4. மேலே பத்தி 3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படும்:

5452–சுற்றுலா குறித்த மூலதனச் செலவு – 01 – சுற்றுலா அடிப்படை வசதிகள் –101 – சுற்றுலாத்தலங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KV – சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் – 16 – பெரும்பணிகள்.
(து.தொ.கு. 5452 01 101 KV 1604)

5. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.266/DS(KM)/கல்வி-II/2011, நாள்:14.11.2011–ல் பெறப்பட்ட ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**வி.கு. ஜெயக்கொடி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை –2.
மாவட்ட ஆட்சித்தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை –9.
(சுற்றுலா இயக்குநர் வழியாக).
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை –9/18.

**நகல்:**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை –9.
மாண்புமிகு நிதித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை –9.
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை –9.
தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை –9.
முதன்மை செயலாளரின் தனிச் செயலாளர், நிதி/சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை –9.
நிதி(கல்வி–2)த் துறை, சென்னை –9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு1/சு2/பொது)த் துறை, சென்னை– 9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**